DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register

CASE No: C.C. No. 151/18

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 1 |
| Name | : | Chellapandi |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.19

முதல் விசாரணை:

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். 27.11.18ம் தேதி கிருஸ்ணாபுரத்தில் உள்ள என் தோட்டத்திற்கு செல்வதற்காக உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் டி.கிருஸ்ணாபுரம் பேருந்தில் ஏறியபோது பையில் ரூ 1 லட்சத்தி 20 ஆயிரம் பணத்தை மாடு பிடிப்பதற்காக வைத்திருந்ததை யாரோ திருடிவிட்டார்கள். பேருந்தில் உட்கார்ந்தவுடன் பையை காணவில்லை என்பதை அறிந்து நான் ஏறும்போது யாரோ உரசியதுபோல் நினைவு வந்ததால் உடனே திரும்பி பார்த்தபோது பேருந்தில் ஏறுவதுபோல் பாசாங்கு செய்துவிட்டு ஒரு நபர் கீழே இறங்கி போய்விட்டார். அக்கம் பக்கம் தேடிப்பார்த்து கிடைக்காததால் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அதசாஆ 1. அதன்பிறகு பணத்தை கண்டுபிடித்ததாக போலிசார் சொன்னதன் பேரில் நீதிமன்றத்தில் மனு செய்து எதிரியிடமிருந்து கைப்பற்றிய பணத்தை திரும்ப பெற்றுச் சென்றேன். ஆஜர் எதிரிதான் பேருந்தில் என்னை உரசிவிட்டு வேகமாக சென்றார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பணம் தான் அது. அது சாபொ1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

சம்பவம் நடந்த மறுநாள்தான் புகார் கொடுத்தேன். புகாரை எழுதிக் கொடுத்தேன். காணாமல் போன பணம் என்னுடையது என்பதற்கு காவல் நிலையத்தில் ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லை. அன்றைய தினம் நான் பையில் வைத்திருந்தது ரூ 1 லட்சத்தி 20 ஆயிரம் ஆகும். அந்த தொகைதான் காணாமல் போனது. பேருந்தில் ஏறும்போதுதான் சம்பவம் நடந்ததாக புகாரில் கூறினேன். எதிரிதான் என்னை உரசி சென்றார் என்று புகாரில் சொல்லவில்லை. போலிசாரிடம் எதிரிதான் திருடினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரியைக் காண்பித்து அடையாள அணிவகுப்பு எதுவும் நடைபெறவில்லை. பேருந்தில்தான் பணம் காணாமல் போனது. புகார் கொடுத்தபிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொல்லிய சம்பவத்துக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் கூறுவதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஒச்சாத்தேவர், வெள்ளைச்சாமி ஆகியோரை எனக்கு தெரியாது. போலிசார் புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பேருந்து நிலையம் அதிக மக்கள் நடமாடும் பகுதி என்றால் சரிதான். அக்கம் பக்கம் நிறைய கடைகள் உள்ளன என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

/Sd./ Chellapandi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — CASE No: C.C. No. 151/18

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 2 |
| Name | : | Vellaichamy |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.19

முதல் விசாரணை:

நான் கீழப்புதூரில் குடியிருந்து வருகிறேன். 28.11.18ம் தேதி காலை 10, 11.00 மணி அளவில் நான் உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் ஊருக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தபோது பக்கத்தில் ஒரு நபர் பணத்தை காணவில்லை என்று பதற்றத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார். கூட்டமாக இருந்தது. என்னவென்று போய் பார்த்தபோது ஒரு நபர் அவர் பேருந்தில் ஏறும்போது இடித்துச் சென்றார் என்றும் திரும்ப பார்த்தபோது பணத்தை காணவில்லை என்றும் சொன்னார். அங்கிருந்தவர்கள் ரூ 98 ஆயிரம் காணாமல் போனதாக சொன்னார்கள். பின்பு அது சம்பந்தமாக அங்கிருந்த போலிசார் என்னை விசாரித்தார்கள். மேலும் என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள்.

கு.வி.

நான் வாலாந்துார் செல்வதற்காக பேருந்து நிலையத்தில் கிழக்குப்புறத்தில் நின்றிருந்தேன். கிருஸ்ணாபுரம் செல்லும் பேருந்துகள் மேற்குபுறம் நிற்கும். எனக்கு கேள்விப்பட்டுத்தான் இந்த விபரங்கள் தெரியும். சம்பவத்தன்று போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

ம.வி.இல்லை.

/Sd./ Vellaichamy

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — CASE No: C.C. No. 151/18

Sessions

| | |
|---|---|
| Deposition of witness of | : P W - 3 |
| Name | : Chellapandi |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.19

முதல் விசாரணை:

நான் கொக்குடையான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி தங்கப்பாண்டியை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல்கையெழுத்து என்னுடையதுதான். 21.11.18ம் தேதி மதியம் 2.00 மணி அளவில் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தார் பேருந்து நிலையத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நானும் தங்கப்பாண்டியும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம். அந்த பார்வை மகஜர் அதசாஆ 2. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

பேருந்து நிலையத்தில் மேற்குப்புறம் போலிசார் பார்வையிட்டார்கள். நான் அங்கு இருந்த டீக்கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் படம் வரைந்த பேப்பரில்தான் கையெழுத்திட்டேன். அதுதவிர வேறு கையெழுத்து எதுவும் இடவில்லை. படம் வரைந்த பேப்பரில் கையெழுத்திட்டதைத் தவிர மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்திட்டு விட்டு போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

/Sd./ Chellapandi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — CASE No: C.C. No. 151/18

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 4 |
| Name | : | Thangapandi |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.19

முதல் விசாரணை:

நான் கொக்குடையான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி செல்லப்பாண்டியைத் தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். 28.11.18ம் தேதி காலை 10.00 மணி அளவில் உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தார் உசிலம்பட்டி பேருந்து நிலையத்திற்கு வந்து சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து தயார் செய்த பார்வை மகஜரில் நானும் சாட்சி செல்லப்பாண்டியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

நான் பேருந்து நிலையத்தில் உள்ள டீக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். நான் படம் வரைந்த பேப்பரில் கையெழுத்திட்டேன். அது தவிர நான் வேறு கையெழுத்திட்டுக் கொடுக்கவில்லை. நான் எழுதாத வெள்ளைப் பேப்பரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

/Sd./ Thangapandi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.